[23rd September 1961

SRI N. R. THIAGARAJAN : அரிசி விலையும் மற்ற விளைபொருள்களின் விலையும் குறைந்துக்கொண்டே போனால் விவசாயிகளைப் பாதிக்காதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரிசி போன்ற பொருள் களின் விலை குறைந்தால், விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படாத அளவிற்கு அரசாங்கம் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும்.

SRI S. RAMALINGA PADAYACHI : அரியலூரில் 30, 40 ரூபாய் விற்றமிளகாய் இப்பொழுது 22 ரூபாய் அளவிற்கு குறைந்து போய்விட்டது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவதினால், அரசாங்கம் தலையிட்டு விலையை உயர்த்துவதற்கு முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மிளகாய் விலை குறைந் திருக்கிறது. சும்மா கொடுத்தால்கூட வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்வார்கள். யாருக்கும் உற்பத்தி செய்வதின் கஷ்டம் தெரியாது.

Long distance bus routes—Nationalization of

* 1737 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to nationalise all the long distance bus routes in the State; and

(*b*) if not the reasons for the same?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The policy of the Government is to take over gradually long distance routes over 120 miles not involving displacement of operators and for which there is adequate traffic prospects.

SRI A. A. RASHEED : Sir, may I know whether any time-limit has been fixed for this nationalization?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir.

SRI M. KALYANASUNDARAM : ஏற்கனவே இருக்கக்கூடிய ஆபரேடர் களுக்குக் குந்தகம் ஏற்படாமல் எடுத்துக்கொள்வதற்குதான் தேசிய மயமாக்குவது என்று பெயரா?

THE HON. SRI V. RAMAIAH : கவர்ன்மெண்டின் புது முடிவு இது வரையில் பிரைவேட் செக்டாரில் கொடுக்கும் ரூட்டுகளில் நாமே புது பஸ்கள் விடவேண்டும் என்பதுதான். இந்த முடிவுப்படி முன்னதாக லாங் ரூட்டுகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதுதான்.

SRI M. KALYANASUNDARAM : Sir, there is another question on the same subject, viz., 1790-A. That can also be taken up along with this question.

DEPUTY SPEAKER : Yes.

Transport (Nationalization)

* 1790-A *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to nationalize bus-transport in the State during Third Five-Year Plan period; and

(*b*) if so, the details of the same?

23rd September 1961]

THE HON. SRI V. RAMAIAH : (*a*) There is no change in the Government's policy of progressive nationalization of Road Transport.

(*b*) There is no such programme for Thrid Five-Year Plan. Specific decisions will be taken by Government from time to time.

SRI N. K. PALANISAMI : Sir, While the Andhra Government and every other State Government except this Government have nationalized bus-transport, why is it that our Government have not undertaken this?

THE HON. SRI V. RAMAIAH : We take decisions according to our experience and according to the circumstances prevailing in our State.

SRI K. VINAYAKAM : Are the Government aware of the fact that nationalization of these bus routes in a few districts in Andhra Pradesh has not proved a very successful enterprise. Will the Government therefore take a lesson and desist from any temptation to nationalize these bus routes in the Third or Fourth Five-Year Plans?

THE HON. SRI V. RAMAIAH : Sir, I have no information as to the position that is obtaining in the neighbouring States.

SRI M. KALYANASUNDARAM : ஒரே மார்க்கத்தில் தனியார் ஏராளமான பஸ் விட்டு அரசாங்கமும் ஏராளமான பஸ் விடுகிறது. இதனால் தனியார் குறைந்துவிடுவார்கள் என்பது அரசாங்கத்தின் நோக்கமா?

THE HON. SRI V. RAMAIAH : புது முடிவின்படி நாம் எடுத்துக் கொள்வதெல்லாம் 120 மைல்களுக்கு மேல் இருக்கும் ரூட்டுகள்தான். அந்த ரூட்டுகளிலே மற்றவர்களுக்கு இடம் இருக்காது.

SRI S. M. ANNAMALAI : குறுகிய தூர பஸ்கள் விடுவது சர்க்காரின் கொள்கையாக இருந்ததே, அதை மாற்றிக்கொண்டதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : திரும்பவும் பரிசீலனை செய்தபோது நீண்ட தூர பஸ் விடுவது அரசாங்கத்திற்கு லாபகரமாகவும், ஜனங்களுக்கு சௌகரியமாகவும் இருப்பதால் இந்த மார்க்கத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

SRI M. KALYANASUNDARAM : நீண்ட தூர பஸ் விடுவதை அரசாங்கம் 'மொனாபலி'யாக எடுத்துக்கொள்கிறபோது, குறுகிய தூர பஸ்களையும் விடுவதற்கு உத்தேசம் இருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : 120 மைல்கள் உள்ள ரூட்டுகளில் அரசாங்கம் பஸ் விடுவதற்கு முடிவு செய்திருக்கிறது. அந்த ரூட்டுகளை 'மொனாபலி' ஆக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய முடிவு.

Washing soda

***1738 Q.—SRI V.K. KOTHANDARAMAN :** கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் வாஷிங் சோடா உற்பத்தி செய்ய உத்தேசமுண்டா ?